*1*

# வாழ்த்துரை

## (1:1, 2)

### *பவுலிடத்திலிருந்தும் தீமோத்தேயுவிடமிருந்தும் (1:1)*

***[1]தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும்.***

***"தேவனுடைய சித்தத்தினாலே" (1:1)***

**தேவனுடைய சித்தத்தினாலே** *என்று பவுல் எழுதினபோது தன்னை அப்போஸ்தலனாக தேவன் தெரிந்து கொண்டார் என்பதை அவர். உறுதிப்படுத்தினார். அவர் அப்போஸ்தனாயிருக்கும்படி, தனக்குத் தானாகவோ அல்லது மனுஷர்களாலோ நியமிக்கப்படவில்லை. இது குறிப்பிடத்தக்கது ஏனெனில், அந்நேரத்தில் சுயமாய் தங்களை அப்போஸ்தலர்களாக்கிக் கொண்டு வஞ்சிக்கிற ஒரு கூட்டம் அன்று இருந்தது (2 கொரிந்தியர் 11:13). பவுல் ஒரு உண்மையான அப்போஸ்தலனாயிருந்தார், இயேசுவின் வெளிப்பாட்டின் மூலம் இந்தப் பொறுப்புக்கு அவர் நியமிக்கப்பட்டார். அவர் தனிப்பட்ட அந்தஸ்தினாலோ மனிதத்தெரிவினாலோ அல்ல தேவனுடைய கிருபையினாலே அப்போஸ்தலனானார் (1 கொரிந்தியர் 15:10).*

*"தேவனுடைய சித்தத்தினாலே [தெலேமா]" என்பது வரலாற்றினூடே பெரும் நிகழ்ச்சிகளில் மையம் வைப்பதைக் குறிக்கிறது. ஏதோ ஒன்று தேவ சித்தத்தினாலே செய்யப்பட்டது என்பது அது நடக்கும்படி அவர் செய்கிறார் என்பது அதன் பொருள் அல்ல. ஜனங்கள் சரியானவைகளைச் செய்து தேவனுக்குக் கீழ்ப்படியும் போது, அவர்கள் அவருடைய சித்தத்தைச் செய்கிறார்கள் (1 யோவான் 3:22). அவர் தம்முடைய சித்தத்தைச் செய்யும்படி பலவந்தம் பண்ணுவதில்லை; ஆகிலும் அவருடைய ஊழியத்திற்கென்று நம்மைக் கீழ்ப்படுத்தும்போது, அவர் நம் மூலமாக கிரியை செய்கிறார் (ரோமர் 15:32; 2 கொரிந்தியர் 8:5; பிலிப்பியர் 2:13).*

*தேவன் வேறுசில பெரிய ஜனங்களை அவர்களுடைய பிறப்புக்கு முன்பாக தெரிந்து கொண்டது போலவே (நியாயாதிபதிகள் 13:5; ஏசாயா 49:1; எரேமியா 1:5; லூக்கா 1:13-17), பவுலையும் அவருடைய பிறப்புக்கு முன்பாக தெரிந்து கொண்டார். "நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினாலே அழைத்த தேவன்," என்று பவுல் எழுதினார் (கலாத்தியர் 1:15).*

*"தேவனுடைய சித்தத்தினாலே" தன்னை அப்போஸ்தலனாக பவுல் சொல்லுவதற்கும் தன்னை விசேஷித்த சாட்சியாக இருக்கும்படி*

*இயேசு தன்னை நியமித்ததாக சொல்லுவதிலும் முரண்பாடுகள் எதுவும் இல்லை (நடபடிகள் 26:16). இயேசு பவுலை நியமித்த செயல் பிதாவின் சித்தமாக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் இயேசு அவருடைய சித்தத்தை நிறைவேற்றவே வந்தார் (யோவான் 5:30).*

***"இயேசு கிறிஸ்துவின்" (1:1)***

*பவுல் தன்னை* **இயேசு கிறிஸ்துவின்** *அப்போஸ்தலன் என்று எழுதினார். "இயேசு" எனும் பெயர் கிரேக்க மொழியின் யோசோஸ் என்பதிலிருந்து எடுக்கப்பட்டது. இது எபிரேய மொழியில் வருகிற Y^ehoshua' என்பதற்கு சமமானது. இந்தக் கலப்பு வார்த்தையாகிய இயே மற்றும் சுவா என்பதும் பழைய ஏற்பாட்டிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட "யோசுவா" (யாத்திராகமம் 17:9), இதன் பொருள் "தேவன் இரட்சிப்பாயிருக்கிறார்" அல்லது "தேவன் இரட்சிக்கிறார்" என்பது. எபிரெய மொழியில் யே அல்லது யா என்பது "யாவே" என்பதன் சுருக்கம், இஸ்ரவேலர்களால் அறியப்பட்டிருக்க வேண்டிய தேவனுடைய நாமம் இது. எபிரெய மொழியில் யாஷா என்றால் "இரட்சிக்கிறார்" என்று பொருள். தேவதூதன் இயேசுவைக் குறித்து யோசேப்பிடம், "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பார்," என்றான் (மத்தேயு 1:21). அவன் "இயேசுவை" சரியான வார்த்தையில் "இயேசு" என்று அல்லது "தேவன் இரட்சிக்கிறார்" என்று அழைத்திருக்கிறான். நடபடிகள் 4:12ல் பேதுரு சொன்னார், "அவராலேயன்றி வெறொருவராலும் இரட்சிப்பில்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே வேறொரு நாமம் கட்டளையிடப் படவுமில்லை."*

*"கிறிஸ்து" எனும் பட்டம்* (*Christos*) *என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்," என்று பொருள், எபிரெய வார்த்தையான mashiach* ("messiah"). *என்பதற்கு சமமான வார்த்தை. "கிறிஸ்து" என்பதும் "மேசியா" என்பதும் பட்டங்கள், பெயர்களல்ல. பழைய ஏற்பாட்டில் ஆண்கள் ஆசாரியர்களாக அபிஷேகம் பண்ணப்பட்டனர் (யாத்திராகமம் 28:41), அதேபோல ராஜாக்களும் (1 சாமுவேல் 15:1), தீர்க்கதரிசிகளும் (1 இராஜாக்கள் 19:16) அபிஷேகம் பண்ணப்பட்டனர். இயேசு இந்த மூன்று பதவிகளையும் வகிக்கிறார் (மத்தேயு 13:57; யோவான் 18:37; எபிரெயர் 3:1). அவர் மட்டுமே தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு இந்த பதவிகள் பெற்றார் (லூக்கா 4:18).*

*இயேசுவின் ஆளுகையும் ஆசாரித்துவமும் பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்டது, பூமியிலிருந்து அல்ல: "பூமியிலே அவர் இருப்பாரானால் அவர் ஆசாரியராயிருக்க மாட்டார்" (எபிரெயர் 8:4). இயேசு பரலோகத்திலே தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்திலே அமர்ந்து ஆசாரிய ஊழியத்தைச் செய்கிறார் (எபிரெயர் 8:1) அங்கே இருந்து கொண்டு அவர் எல்லாவற்றின் மேலும் ஆளுகை செய்கிறார் (எபேசியர் 1:20-22; 1 பேதுரு 3:22). தீர்க்கதரிசியாகிய சகரியா, "... அவர் மகிமை பொருந்தினவராய், தமது சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; தம்முடைய சிங்காசனத்தின் மேல் ஆசாரியராயும் இருப்பார்"; இவ்விரண்டின் நடுவாக சமாதானத்தின் ஆலோசனை விளங்கும் (சகரியா 6:13) என்று சொன்னார். இயேசு பரமேறி தமது பிதாவின் வலது பாரிசத்திலிருக்கும்படி எடுத்துக்*

கொள்ளப்பட்டபோது பெற்ற ஆளுகையையும், ஆசாரிய ஊழியத்தையும் தொடர்ந்து நடப்பித்து அவரது வருகை மட்டும் ஆளுவார். அந்த நேரத்தில் தான் அவர் தமது ஆளுகையை தேவனிடத்தில் ஒப்புக் கொடுப்பார் (1 கொரிந்தியர் 15:22-28). பூமிக்குரிய ஆளுகையையோ ஆசாரித்துவத்தையோ பெறப் போவதில்லை.

"இயேசு கிறிஸ்து" எனும் பெயரும் பட்டமும் பவுலின் எழுத்துகளில் எழுபத்து ஒன்பது முறை காணப்படுகிறது. வார்த்தைகள் மாற்றப்பட்டு "கிறிஸ்துஇயேசு" எனும் பதம் தொண்ணூற்று ஒன்பது முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. முந்தின பதம் அவரை இரட்சகராக அடையாளப்படுத்தி, கிறிஸ்து என்றழைக்கின்றது. பிந்தின பதம் அவருடைய ஊழியத்தை வலியுறுத்தி, கிறிஸ்து, இரட்சகர் என்று பேசுகிறது. அநேகமாக, இந்த வார்த்தைகளில் வரிசையைப் பயன்படுத்தி பெரிதாக வலியுறுத்தலைக் கொடுக்கக் கூடாது.

***அப்போஸ்தலனாகிய ... (1:1)***

அப்போஸ்தலனாகிய எனும் சொற்றொடரை உட்படுத்தியது மூன்று நோக்கங்களுக்குப் பயன்பட்டிருக்க வேண்டும்: பவுல் எனும் பெயர் பொதுவானதாக இருந்ததால் அடையாளச் சொல்லாக பயன்படுத்தப்பட்டது; அவருடைய அப்போஸ்தல அதிகாரம் சரியானதுதானா என அறிந்து கொள்ளும்படி பயன்படுத்தப்பட்டது; கொலோசெயர்கள் அவரைப் பற்றி அறிந்திருந்தபடியால் தன்னைக் குறிப்பிடும்படியாக பயன்படுத்தப்பட்டது. ஒரு அப்போஸ்தலனிடமிருந்து நிருபம் வருவதென்பது அது இயேசுவின் அதிகாரத்தைச் சுமந்து வந்தது (1 கொரிந்தியர் 14:37), இது மற்ற வசனங்களுக்குள்ள அதிகாரம் இதற்கும் இருந்தது (2 பேதுரு 3:15ஆ 16) என்பதைப் காட்டுகிறது. கொலோசெயரிலுள்ள ஒவ்வொரு வசனமும் (வார்த்தையும்) தேவனுடைய வார்த்தைதான். தன்னை அனுப்பினவருடைய அதிகாரத்தையும் வல்லமையையும் பவுல் கொண்டிருந்தார். அவர் தனது தனிப்பட்டக் கருத்தை வெளியிடவில்லை; மாறாக, அவர் அதிகாரமிக்கவராக எழுதினார், அதாவது நேரடியாகத் தனக்குக் கொடுக்கப்பட்ட இயேசுவின் செய்தியை, ஏவுதல் மூலமாக எழுதினார் (1 கொரிந்தியர் 14:37; கலாத்தியர் 1:11, 12). கொலோசெயர்கள் நிருபத்தை கிறிஸ்து தங்களுக்கு அனுப்பிய செய்தியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த நிருபத்தில் பவுல் தன்னை அப்போஸ்தலன் என்று அழைத்துக் கொண்டார், ஆகிலும் அவர் தம்முடைய நிருபங்கள் எல்லாவற்றிலும் தன்னை அப்போஸ்தலன் என்று அழைத்துக்கொள்ளவில்லை.

> ... பவுல் அந்த சபைகளுக்கு எழுதும்போது எங்கே தனது அப்போஸ்தல அதிகாரத்தை உறுதிப்படுத்த வேண்டுமோ அங்கே தனக்கு அளிக்கப்பட்ட அப்போஸ்தலிக கட்டளையை உறுதிப்படுத்தி எழுதினார், அவரோடு தொடர்பு கொண்டிருந்து நட்பாலும் உண்மையுள்ளவர்களாயும் நடந்து கொண்ட பிலிப்பியர் மற்றும் தெசலோனிக்கேயர்களுக்கு எழுதின நிருபங்களில் அவர் அதை குறிப்பிடாமல் தவிர்த்தார். அதேபோல, தனி நிருபமாக பிலேமோனுக்கு எழுதியபோது அவனுடைய தயவை நாடியதால் இந்த பட்டத்தை அவர் பயன்படுத்தவில்லை, மாறாக,

*கலாத்திய நாட்டுச் சபைகளுக்கு அவர் எழுதிய நிருபங்களில், அங்கே அவருடைய அதிகாரம் குறித்து சவால்விடப்பட்டதால், அவரது அப்போஸ்தல ஸ்தானத்தைக் குறித்து மிக பலமாக உறுதிப்படுத்துகிறது.*[1]

*கலாத்தியர் நிருபத்தில் (கலாத்தியர் 1:1), பவுல் தனக்குக் கொடுக்கப்பட்ட அப்போஸ்தலிகம் தேவனால் கொடுக்கப்பட்டதாகச் சொல்லி உறுதிப்படுத்துகிறார், அது மனிதனிடமிருந்து தனக்கு வந்தது அல்ல என்றார். கொரிந்தியர்கள் அவர் ஒரு அப்போஸ்தலனாக இருப்பதைக் குறித்து கேள்வி எழுப்பியபடியால், பவுல் தனது அப்போஸ்தலிக்கத்தை ஆதரித்து கொரிந்து நிருபத்தில் எழுதினார் (1 கொரிந்தியர் 9:1, 2; 15:9, 10; 2 கொரிந்தியர் 11:5; 12:11, 12). அவர் பன்னிருவரில் ஒருவராக இல்லாதிருந்தும் மற்ற அப்போஸ்தலர்களுக்கு சமமானவராகவும் சம அதிகாரம் பெற்றவராகவும் இருந்தார்.*

*"அப்போஸ்தலன்" எனும் வார்த்தை "அப்போஸ்டலாஸ்" என்னப்படும் கிரேக்க வார்த்தையின் பொழிப்புரையான மொழியாக்கம் (இதன் நேரடிப் பொருள், "அனுப்பப்பட்டவன்"). புதிய ஏற்பாட்டில், அது கட்டளையிடப்பட்டவன் என்ற பொருளையுடையதாயிற்று - ஒரு ஸ்தானாபதியாக அனுப்பப்படுதல், அல்லது ஒருவருடைய பெயரால் செயல்படுதல், ஒருவர் சார்பாகப் போதல், தன்னை அனுப்பினவரின் அதிகாரத்தின் பேரில் செல்லுதல் என்றெல்லாம் பொருள்படும். இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் அவரைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள், தங்களையல்ல, தங்களை அனுப்பினவராகிய அவருடைய கட்டளைகளைப் போதிக்க வேண்டும் (மத்தேயு 28:20).*

*வழக்கமாக, "அப்போஸ்தலன்" எனும் பதம் பன்னிருவருக்கே பயன்படுத்தப்பட்டது, தமது அநேக சீஷர்களிடத்திலிருந்து ஒரு சிறுகூட்டமாக இயேசுவால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (லூக்கா 6:13). இவர்கள் தமது சிறப்பு பிரதிநிதிகளாகக் கட்டளை கொடுத்து அனுப்பப்பட்டவர்கள். தமது அதிகாரத்தின் அடிப்படையில், இயேசு தமது ஊழியத்தின் விஸ்தரிப்பினிமித்தம் மற்றவர்களுக்குத் தம்மை பிரதிநிதித்துவப்படுத்த அவர்களை வெளியில் அனுப்பினார் (மத்தேயு 10:1-5; 28:18-20). அவர்களை ஏற்றுக்கொண்டவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களாவார்கள் (மத்தேயு 10:40).*

*யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்து பிறகு தற்கொலை செய்து கொண்ட பின் மத்தியா அவனுடைய ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டான்; இப்படியாக அவன் பன்னிருவரில் ஒருவனானான் (நடபடிகள் 1:16-26). புறஜாதிகளுக்கென நியமிக்கப்பட்ட அப்போஸ்தலன், பவுல் (ரோமர் 11:13), அவர் பன்னிருவரில் ஒருவரல்ல. அவர் பின்னான நாட்களில் தெரிந்துகொள்ளப்பட்ட, "அகாலப் பிறவி ... போன்றவர்" (1 கொரிந்தியர் 15:8).*

*பவுல் பன்னிருவரில் ஒருவராக இல்லாதிருந்தும், இயேசுவின் பிரதிநிதியாக அதே அதிகாரத்தையுடையவராக இருந்தார். அப்போஸ்தலர்கள், புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளோடு, சபையின் அஸ்திபாரமாக இருந்தார்கள். (எபேசியர் 2:20). அவர்கள் பரிசுத்த ஆவியின் உதவியின் மூலம் இயேசுவிடமிருந்து வெளிப்பாட்டை அவர்கள் பெற்றார்கள் (யோவான் 14:26; 16:13; எபேசியர் 3:5). அவர்கள் இயேசுவைக்*

*குறித்த கடைசி வார்த்தைகளைக் கொண்டவர்களாக (உறுதிப்படுத்தப் பட்டவார்த்தைகளை) ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் (2 பேதுரு 3:2). ஆதிசபை "அப்போஸ்தலருடைய" உபதேசத்தில் தரித்திருந்தது (நடபடிகள் 2:42) ஏனெனில் அது அவர்களுடைய அதிகாரத்தை மதித்தது.*

*"அப்போஸ்தலன்" எனும் பதம் பன்னிருவரைப் போன்று இயேசுவின் அப்போஸ்தலர்களாக பதவி பெறாதவர்களுக்கும் பொருந்தும். அனுப்பப்பட்ட எந்த செய்தியாளனும் - அந்நியோகியாவிலிருந்து அனுப்பப்பட்ட, பர்னபா போன்றவர்கள் (நடபடிகள் 13:2-4) ஒரு "அப்போஸ்தலன்" என அழைக்கப்படலாம் (நடபடிகள் 14:4, 14; காண்க 2 கொரிந்தியர் 8:23; பிலிப்பியர் 2:25). பர்னபா அந்தியோகியா சபையின் அப்போஸ்தலன் என்னப்பட்டான் ஆனாலும் விசேஷித்த பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன் அல்ல. எருசலேமில் அவன் வித்தியாசப்படுத்திக் காட்டப்பட்டதிலிருந்து, இது உறுதியாகிறது (நடபடிகள் 9:27).*

*பவுல் தமஸ்குவிலிருக்கிற கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும்படி பயணம் பண்ணிக் கொண்டிருக்கும் போது, இயேசு அவருக்குத் தரிசனமானார். அவர் கொடுத்த காரணம் இதுதான்: "நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன்" (நடபடிகள் 26:16). இந்தத் தரிசனம் ஒருவர் இயேசுவின் அப்போஸ்தலனாவதற்கு முன் தகுதியாக நிறைவுறச் செய்கிறது (1 கொரிந்தியர் 9:1, 2; 15:8): அதாவது உயிர்த்தெழுந்த ஆண்டவரை கண்ணாரக் கண்டிருக்க வேண்டும் (நடபடிகள் 1:21, 22; 2:32; 10:40, 41). பவுல் மற்றொரு தகுதியாம்சமாகிய இயேசுவால் நேரடியாக தெரிந்து கொள்ளப்பட்டு தேவனால் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார், மனுஷனால் அல்ல (2 கொரிந்தியர் 1:1; கலாத்தியர் 1:1; எபேசியர் 1:1; 2 தீமோத்தேயு 1:1).*

*பவுலின் அப்போஸ்தலிகம் அவர் நடப்பித்த அடையாளங்கள், அற்புதங்கள், மற்றும் அதிசயங்களால் உறுதிப்படுத்தப்பட்டது (2 கொரிந்தியர் 12:12; மேலும் காண்க ரோமர் 15:18, 19). கொரிந்துசபை அற்புத வரங்களைப் பெற்றுக் கொண்டதே அவர் ஒரு அப்போஸ்தலன் என்பதற்கான சாட்சியமாகும் (1 கொரிந்தியர் 12:8-11). ஆவியின் வரங்கள், கொரிந்து சபையார்களைப் போலவே, அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதன் மூலம் கொடுக்கப்பட்டது (நடபடிகள் 8:17, 18; 19:6).*

*தமஸ்குவின் பாதையில் பவுலுக்கு இயேசு தரிசனமான போது, அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை பட்டணத்தில் சொல்லப்படும் என்றார். (நடபடிகள் 9:6). அனனியா, இயேசுவால் அனுப்பப்பட்டு, பவுலிடம் சொன்னார், "இப்பொழுது நீ தாமதிக்கிறது என்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்றான் (நடபடிகள் 22:16). பவுல் ஞானஸ்நானம் பெறும்வரை அவருடைய பாவங்கள் கழுவப்படவில்லை. இதைத் தொடர்ந்து, அவர் வேறெந்த அப்போஸ்தலர்களையும் விட அதிகமாய் அவர் பிரயாசப்பட்டார் (1 கொரிந்தியர் 15:10).*

*"... பவுல்" (1:1)*

***பவுல்*** *தனது கொலோசெயர் நிருபத்தை அறிமுகப்படுத்தும் போது அப்போஸ்தல அதிகாரம் உள்ள ஆசிரியராகக் குறிப்பிட்டார். அவர் தீமோத்தேயுவை தன்னுடைய உடன் ஊழியக்காரனாகவும் கிறிஸ்துவுக்குள் சகோதரனாகவும் குறிப்பிட்டார். இதைத் தொடர்ந்து, தன்னுடைய கொலோசெ சகோதரர்களை கிறிஸ்துவுக்குள்ளானவர்களாகவும் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களை அவர்களுக்காக வேண்டியும் எழுதினார்.*

*பவுலின் பதிமூன்று நிருபங்கள் அவருடைய பெயருடன் ஆரம்பிக்கிறது. இந்த நிருபத்தையும் "பவுல்," என்ற வார்த்தையுடன், தனது நாளில் இருந்த வழக்கமான வாழ்த்துரையைக் குறிப்பிட்டார். அவர் வழக்கமாக தனது பெயரைச் சேர்த்து தன்னோடு இருக்கும் நபரையோ நபர்களையோ அவர்களுடைய பெயரை அல்லது பெயர்களுடன் சில வேளைகளில் எழுதப்படும் நபர்களைக் குறிப்பிட்டு நிருபத்தை பெறுவோருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பார்.*

*நடபடிகள் இந்த அப்போஸ்தலனுக்கு இரண்டு பெயர்களான, "சவுல்," மற்றும் "பவுல்" என குறிப்பிடுகிறது (நடபடிகள் 13:9). அவர் யூதர்களுக்குள் இருக்கையில், அவர் எபிரெயப் பெயராலே, "சவுல்" என அறியப்பட்டிருப்பார் (சவுல், என்பது "தேவனால் கேட்கப்பட்டவன்" என்று பொருள்). இதற்குச் சமமான கிரேக்க வார்த்தை Saulos. புறஜாதிகளின் உலகில் பவுல் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது லூக்கா அவருடைய கிரேக்கப் பெயரைப் பயன்படுத்துகிறார் - Paulos அல்லது பவுல், இதன் பொருள் "சின்ன" அல்லது "சிறிய" என்பது. தனது நிருபங்களில் அவர் தன்னை "பவுல்" என்றே குறிப்பிட்டார் (உதாரணமாக, ரோமர் 1:1; 1 கொரிந்தியர் 1:1). பேதுரு அவரை "பவுல்" என்றே தனது நிருபமாகிய 2 பேதுரு 3:15ல் குறிப்பிட்டார், இது புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் பவுலின் நிருபங்களுக்கு புறம்பே இங்கு மட்டுமே அவர் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது.*

*தமஸ்குவுக்குப் போகும் வழியில் ஏற்பட்ட அனுபவத்தை மறுபடியும் நினைவுகூர்ந்து பார்த்த பொழுது (நடபடிகள் 22:7; 26:14), பவுல் இயேசு சொன்னவைகளான "சவுலே, சவுலே ..." என்பதை திருப்பிச் சொல்லுகிறார் மற்ற எல்லா சம்பவங்களிலும் தன்னை "பவுல்" என்றே அழைத்துக் கொள்கிறார். தமது நிருபங்களில் அவர் "சவுல்" என்ற பெயரை பயன்படுத்தியதே இல்லை - ஏனெனில் புறஜாதி உலகிற்கு அல்லது புறஜாதி பின்னணியையுடைய தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் போன்ற தனிநபர்களுக்கு அவைகள் எழுதப்பட்டன.*

*சிலர் அவருடைய பெயர் அவர் கிறிஸ்தவனான போது "சவுலிலிருந்து" "பவுலாக" மாறியது என்கின்றனர், இது உண்மையாக இல்லாமலிருக்கும், அவர் மனமாற்றப்பட்டபின் பன்னிரெண்டு வருஷம் வரைக்கும் அவரை "சவுல்" என்றே லூக்கா குறிப்பிட்டார் (நடபடிகள் 7:58; 8:1-3; 9:1-22; 11:25-30; 13:1, 2). அவர் தனது முதல் சுவிசேஷப் பயணத்தில் சீப்புருத்தீவுக்குப் போனபோது பாப்போவில் எலிமாவை எதிர்த்துப் பேசும்போதுதான் முதல் முறையாக "பவுல்" என்று அழைக்கப்பட்டார். லூக்கா, "அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல்" என்று எழுதினார் (நடபடிகள்*

*13:9). லூக்காஅவருடைய பெயர் "சவுல்" என்பதிலிருந்து "பவுல்" என்று மாற்றப்பட்டது என்று எழுதவில்லை. "இந்த அப்போஸ்தலன் ஒருவேளை தனது குழந்தைப் பிராயத்திலிருந்தே Saul (Saoul, Saulos) மற்றும் Paul." என்னும் இரண்டு பெயர்களையும் கொண்டிருந்திருக்கலாம்.[2] இது வழக்கத்துக்கு மாறானது அல்ல, எபிரேய மொழியின் பெயரையும் ஒரு கிரேக்க மொழியின் பெயரையும் கொண்டிருப்பது பொதுவான செயல்.*

*மற்ற எல்லா அப்போஸ்தலர்களையும் காட்டிலும் பவுலைக் குறித்து - அப்போஸ்தலர் நடபடிகளிலிருந்து (நடபடிகள் 13-28) மாத்திரமல்ல, அவருடைய நிருபங்களிலிருந்து அதிகமாய் அறியப்பட்டிருக்கிறது. தமஸ்குவில் அவர் மனமாற்றப்பட்ட பின், உடனடியாக அவர் தமஸ்குவிலும் பின்பு எருசலேமிலும் பிரசங்கம் பண்ணினார் (நடபடிகள் 9:19-22, 26-28). யூதர்கள் அவருடைய உயிரைக் குறித்து மிரட்டியதால், அவர் தரிசுப் பட்டணத்துக்கு அனுப்பப்பட்டார் (நடபடிகள் 9:29, 30). அவர் பர்னபா வந்து தரிசுப் பட்டணத்திலிருந்து அந்தியோகியாவுக்குக் கூட்டிக் கொண்டு போகும் வரை நெருக்கமாக யாரையும் அறிந்திருக்கவில்லை (நடபடிகள் 11:22-26; காண்க கலாத்தியர் 1:22). இதைத் தொடர்ந்து, அவர் மூன்று சுவிசேஷப் பயணங்களை மேற்கொண்டார் (நடபடிகள் 13:1-21:15).*

*மூன்றாவது சுவிசேஷப் பயணத்தின் முடிவில், பவுல் எருசலேமில் சிறை பிடிக்கப்பட்டார் யூதர்கள் அவரை கொலைசெய்ய வகைதேடிக் கொண்டிருந்தார்கள், ஆகிலும் ரோம சேனாதிபதி அவரை தப்பிவித்தார் (நடபடிகள் 21:26-39). அங்கிருந்து அவர் செசரியாவுக்குக் கொண்டு போகப் பட்டு அங்கே பேலிக்ஸினால் விசாரிக்கப்பட்டு, பின்பு பெஸ்து மற்றும் அக்ரிப்பா ஆகியோரால் விசாரிக்கப்பட்டார் (நடபடிகள் 23-27). ஒரு ரோமக் குடிமகன் எனும் உரிமையில், ரோமாபுரியில் இருந்த இராயன் தன்னை விசாரிக்கும்படி அபயமிட்டார், அவர் அங்கே தானே வாடகைக்கு எடுத்த வீட்டில் இரண்டு வருஷம் தங்கி சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (நடபடிகள் 28:30).*

*அவருடைய வாழ்க்கையின் பின்பகுதியில் என்ன நடந்தது என தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு எழுதப்பட்ட நிருபங்களையும் ஏவப்பட்டிராத பாரம்பரியங்களையும் வைத்துத் தெரிந்து கொள்ளலாம்:*

> *அநேகமாக பவுல் மறு காவலில் வைக்கப்பட்டு (கி.பி. 67ல்) நீரோவின் கையினால் மரணத்தைச் சந்தித்ததற்கு முன் விடுதலை செய்யப்பட்டு கி.பி. 63ல் ஸ்பானியா மற்றும் அகாயா பகுதிகளில் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். 1ம் கிளமெண்ட் (5.5-7; ? கி.பி. 95), முரட்டோரியன் சமய சட்டதிட்டக் கொள்கை (கி.பி. 170), மற்றும் தள்ளுபடியாகமம் (வெர்செல்லி) பேதுருவின் நடபடிகள் (1.3; கி.பி. 200) ஆகியன ஸ்பானிய பயணத்திற்கு சாட்சியங்கள்; மேலும் போதக நிருபங்கள் நடபடிகளில் கூறப்பட்ட ஊழியங்களுக்குப்பின் கிழக்குப்பகுதியில் ஊழியம் சம்பந்தப்பட்டதாக காணப்படுகிறது.[3]*

*ஒருவேளை, விசாரிக்கப்பட்டு விடுதலை கிடைத்த பின், அவர் தீமோத்தேயுவை ஏபேசுவில் விட்டு மக்கதோனியா வழியாக (1 தீமோத்தேயு 1:3) ஸ்பானியாவில் சுவிசேஷ ஊழியம் செய்ய கடந்து*

சென்றிருக்கலாம் (ரோமர் 15:24). இந்தப் பயணத்தின் போது, கிரேத்தா தீவு வழியாக கடந்து போகையில், தீத்துவை குறைவானவைகளை ஒழுங்கு செய்யும் பொருட்டு அங்கே விட்டுச் சென்றார் (தீத்து 1:5). பின்பு அவர் மாரிகாலத்தில் நிக்கபோலியில் தங்க திட்டமிட்டார் (தீத்து 3:12).[4] ஸ்பானியாவிலிருந்து திரும்பி வருகையில், அநேகமாக அவர் மீண்டும் ரோமாபுரியில் காவலில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் (2 தீமோத்தேயு 1:16, 17; 2:9).[5] அவர் தனது இரண்டாவது விசாரணையின் போது, அவர் தண்டிக்கப்படாவிட்டாலும் காவலில் வைக்கப்பட்டிருந்தார் (2 தீமோத்தேயு 4:16-18). இருப்பினும் விடுதலையாகும் நம்பிக்கை இல்லாமலிருந்தார்; தமது முடிவு நெருங்கியிருக்கிறது என உணர்ந்தார் (2 தீமோத்தேயு 4:6-8). பவுல் ஆஸ்டியன் வழியில் சிரச்சேதம் பண்ணப்பட்டதாக பாரம்பரியம் சொல்லுகிறது, அது பழங்கால ரோமாபுரிக்கு அருகான இடம். ரோம பிரஜையாக தண்டிக்கப் பட்டிருப்பாரேயானால், பாரம்பரியம் சொல்லுகிறபடி பேதுரு கொல்லப்பட்டதுபோல, அவர் சிலுவையில் அறையப் பட்டிருக்கமாட்டார், மாறாக பட்டயத்தால் சிரச்சேதம் பண்ணப்பட்டிருக்க வேண்டும்.

இந்த பதிமூன்று நிருபங்களும் குறைவாக அல்லது மிஞ்சி எண்ணிய வகையில் அதன் செல்வாக்கை மதிப்பிட இயலாது. இவைகள் ஆதி சபையார்களால் மட்டுமே வாசிக்கப்படவில்லை, மாறாக அடுத்தடுத்து வந்த சந்ததிகள் தோறும் ஆராயப்பட்டு வாசித்துக் கற்றுக் கொள்ளப்பட்டன. இந்த நிருபங்களில் சில மிகப் பெரிய கிறிஸ்தவ சிந்தனைகளும் உபதேசக் கோட்பாடுகளும் காணப்படுகின்றன. ஒருவகையில் அவருடைய சிறைநிருபங்கள் அவருடைய சுவிசேஷ பயணத்தைக் காட்டிலும் கிறிஸ்தவத்தில் அதிக செல்வாக்கை செலுத்தியிருக்கின்றன.

### *“சகோதரனாகிய தீமோத்தேயு” (1:1)*

ஒரு முக்கியத்துவம் உள்ளவனாக **தீமோத்தேயுவின்** பெயர் புதிய ஏற்பாட்டில் இருபத்தி நான்கு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. வசனம் 1ல் தீமோத்தேயு வாழ்த்துதல் சொல்லுவதாகக் குறிப்பிடுவதன் மூலம், தீமோத்தேயு ஒரு சில கொலோசெ மக்களை அறிந்திருந்தான் என்பதைக் குறிப்பிடுகிறது. முகவுரை வாழ்த்துதலில் பவுல் அவனை 2 கொரிந்தியர், பிலிப்பியர், கொலோசெயர், 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர் மற்றும் பிலேமோன் ஆகிய நிருபங்களில் சேர்த்துக் கொண்டு எழுதுகிறார். அவனுடைய பெயரை சேர்த்துக் கொண்டிருப்பது நிருபம் எழுதப்படும்போது அவன் பவுலுடன் இருந்தான் என்பதைக் காட்டுகிறது. அவனுடைய பெயரை பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தின் போது குறிப்பிட வில்லை, அந்த நிருபம் மற்ற சிறை நிருபங்கள் எழுதப்பட்ட நேரத்தில் எழுதப்பட்டிருந்த போதும் அவனுடைய பெயரைக் குறிப்பிட வில்லை.

“தீமோத்தேயு” (*Timotheos*) என்பதன் பொருள் “தேவனைக் கனம் பண்ணுதல்” அல்லது “தேவனைக் கனம் பண்ணும் ஒருவன்.” தீமோத்தேயுவின் தகப்பன் ஒரு கிரேக்கன், அவனுடைய தாய், ஐனிகேயாள், ஒரு யூத விசுவாசி (நடபடிகள் 16:1). அவனுடைய தாய், அவனுடைய பாட்டியாகிய லோவிசாளுடன் சேர்ந்து, அவன் சிறுபிள்ளையாயிருந்த போதிலிருந்து

*வசனத்தைப் போதித்திருக்கிறார்கள். அவை அவனுடைய பக்தி வாழ்க்கையில் பெரும் செல்வாக்கைக் கொடுத்திருந்தது (2 தீமோத்தேயு 1:5; 3:15). பவுல் அவனுக்கு இயேசுவின் வார்த்தைகளைப் போதித்திருந்தார், கூடவே அவனுக்கு முன்பாக போதிப்பதிலும், வாழ்க்கையிலும், சோதனையில் நிலை நிற்பதிலும் முன்மாதிரியாயிருந்தார் (2 தீமோத்தேயு 2:2; 3:10, 11, 14). பவுல் அவனை "என் குமாரன்" என்று குறிப்பிடுவதன் மூலம் (1 தீமோத்தேயு 1:18; 2 தீமோத்தேயு 1:2; 2:1) பவுல்தான் அவனை ஞானஸ்நானப்படுத்தினார் என்று பொருள்படுகிறது. தீமோத்தேயு லீஸ்திராவைச் சேர்ந்தவனானதால், பவுலின் முதலாவது சுவிசேஷப் பயணத்தின்போது அவர் கல்லெறியுண்டதை அவன் பார்த்திருக்கக் கூடும் (நடபடிகள் 14:19; 2 தீமோத்தேயு 3:11).*

*தீமோத்தேயுவின் பெயர் சேர்க்கப்பட்டதினால் பவுல் எழுதின நிருபத்திற்கு அவன் உதவியிருந்தான் என்று எவ்விதக் குறிப்பும் கொடுக்கப்படவில்லை. தீமோத்தேயு பவுலிடமிருந்து கற்றுக் கொண்டான், மறுதலையாக அல்ல (2 தீமோத்தேயு 2:2). தன்னை அப்போஸ்தலன் என்று குறிப்பிடும் பவுல் தீமோத்தேயுவுக்கு அப்படிக் குறிப்பிடவில்லை, பவுல் தன்னுடைய பதிவியினிமித்தம் ஒப்புயர்வற்றநிலையில் தன்னை வித்தியாசப்பட்டவராய் காட்டுகிறார். அப்போஸ்தலர் கொண்டிருந்த அதே அதிகாரத்தை தீமோத்தேயு கொண்டிருக்கவில்லை.*

*பிலேமோனிலும் பிலிப்பியரிலும், பவுல் எழுதிய முதல் வசனத்தில் உள்ளடங்கின செய்திக்குப் பின் தீமோத்தேயுவின் பெயரைக் குறிப்பிடவில்லை. இருப்பினும் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில், பவுல் தொடர்ந்து வசனம் 9 வரை தீமோத்தேயுவையும் சேர்த்து "நாங்கள்" என்ற வார்த்தையை பயன்படுத்தினார். வசனம் 12ல் சொல்லப்பட்டுள்ள "நம்மை" எனும் வார்த்தை கொலோசெயர்களையும் பவுலையும் அதேபோல தீமோத்தேயுவையும் சேர்த்துக் குறிப்பிடுகிறது. வசனம் 23ல் பவுல் தன்னிலை பிரதிப் பெயர்சொல்லுக்கு மாற்றி "நான்" என்று குறிப்பிட்டார். நிருபத்தின் பின்பகுதியில் "எங்கள்" "நம்முடைய" போன்ற பதங்களைப் பயன்படுத்தி பவுல் தீமோத்தேயுவையும் சேர்த்து எழுதியிருக்கிறார் (கொலோசெயர் 1:28; 4:4). ஆகிலும், பவுல் இந்த வார்த்தைகளை நிருபத்திற்கு தக்க வகையில் ஒழுங்கு செய்து எழுதி, தன்னையே குறிப்பிட்டு எழுதியிருக்கலாம்.*

*பவுல் தீமோத்தேயுவிடம் கொண்டிருந்த உயர்ந்த மதிப்பு அவருடைய இந்த வார்த்தையில் காணப்படுகிறது, "உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்தில் இல்லை" (பிலிப்பியர் 2:20). இது இரண்டு விதமாக எடுத்துக் கொள்ளப்படலாம். பவுலுடன் சென்றவர்களில் உண்மையாய் சக கிறிஸ்தவர்களைக் குறித்து அக்கரையுள்ளவர்களாக வேறொருவரும் இருந்திருக்கவில்லை அல்லது தீமோத்தேயுவைப் போல பிலிப்பியர்களிடம் அக்கரை உள்ளவர்களாக வேறு யாரும் இருக்க வில்லை. பவுல் அநேகமாக இரண்டாவது கருத்தையே எழுதியிருக்கலாம்.*

*பவுலின் இரண்டாவது சுவிசேஷப் பயணத்தில், அந்தியோகியாவில், பர்னபாவின் சகோதரியின் மகன், மாற்கை தங்களுடன் கூட்டிக் கொண்டு போவதா வேண்டாமா என்பதில் உடன்பாடு ஏற்படவில்லை, அவர்கள் அப்பொழுது தங்களுடைய முதல் சுவிசேஷப் பயணத்தின்போது ஸ்தாபிதம்*

பண்ணின உள்ளூர் சபைகளை மறுமுறை போய்ப்பார்க்க விரும்பினார்கள். முடிவாக பர்னபா மாற்கைக் கூட்டிக் கொண்டு சீப்புருவுக்குப் போய்விட்டான். பவுல் சீலாவைக் கூட்டிக் கொண்டு சிரியா மற்றும் சிலிசியா வழியாகப் பயணம் பண்ணினார் (நடபடிகள் 15:36-41). பவுல் லீஸ்திராவுக்குப் போனபோது, தன்னோடு கூட தீமோத்தேயுவையும் கூட்டிக்கொண்டு போக விரும்பினார். யூதர்களின் தயவைப் பெற்று (1 கொரிந்தியர் 9:21) அவர்களுக்கும் சுவிசேஷத்தைச் சொல்ல ஏதுவாக, பவுல் தீமோத்தேயுவை விருத்தசேதனம் பண்ணினார் (நடபடிகள் 16:1-3).

இரட்சிக்கப்பட விருத்தசேதனம் தேவைப்படுவதில்லை; கிறிஸ்தவர்களுக்கு அது தெரிவு செய்துகொள்ளும்படி விடப்பட்டது (1 கொரிந்தியர் 7:18, 19; கலாத்தியர் 5:6; 6:15). அப்போஸ்தலர்களும் எருசலேமிலிருந்த மூப்பர்களும், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, புறஜாதிக்கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதும் விருத்தசேதனம் பெறுவதும் தேவையற்றது எனத் தீர்மானித்தனர். பவுல் அந்தியோகியாவில் இருக்கும் போது முரண்பாடான ஒரு கேள்வி எழும்பியது, அவர்கள் எருசலேமுக்குப் போய்ச் சேர்ந்தபோதும் விவாதம் தொடர்ந்தது (நடபடிகள் 15:1, 5, 24-29). தீமோத்தேயுவை பவுல் விருத்தசேதனம் செய்த போதிலும், தீத்துவுக்கு விருத்த சேதனத்தை கொடுக்க பவுல் மறுத்தார் (கலாத்தியர் 2:3-5). சூழ்நிலைகள் ஒரே மாதிரியிருக்கவில்லை. சபை தீத்துவை விருத்தசேதனம் செய்ய கட்டாயப்படுத்த முயற்சித்தது. இந்த செயல் தீத்துவின் சுதந்திரத்தில் தலையிடுவதும் பிற கிறிஸ்தவர்களுக்கு தவறான செய்தியை அனுப்புவதுமாகும், அதினால் விருத்த சேதனம் அவசியமான ஒன்று என்றாகிவிடும். தேவைப்படாவிட்டாலும் பவுல் விருத்தசேதனமில்லாத புறஜாதியுடன் தொடர்பு கொண்டுள்ளான் என்ற அவப்பெயரை நீக்க விரும்பி தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் கொடுத்தார். இப்படிச் செய்ததால் மட்டுமே யூதர்களுக்கு வல்லமையாய் பிரசங்கிக்க அவரால் முடிந்தது.

தீமோத்தேயுதான் பவுலின் இரண்டாவது சுவிசேஷப் பயணத்தின் போது அடிக்கடி தோள்கொடுத்த சிநேகிதனாயிருந்தான், அவன் பவுலின் எஞ்சியிருந்த வாழ்விலும் உடனிருந்தான். அவன் ஆசியா மைனர்பகுதியைச் சேர்ந்தவனாயிருந்தும், பவுலின் ஐரோப்பிய ஊழியங்களிலே அவன் அதிகமாய் உடன் சென்றான், அவ்வூழியம் பவுல் மக்கதோனியாவுக்கு அழைக்கப்பட்டபின் ஆரம்பிக்கப்பட்டது (நடபடிகள் 16:9, 10). தீமோத்தேயுவைக் குறித்து குறிப்பிடப்படுகிற கடைசி வசனம் ஒன்றேல் 2 தீமோத்தேயு 1:2 ஆக இருக்க வேண்டும் அல்லது எபிரெயர் 13:23ஆக இருக்க வேண்டும், அதில், “சகோதரனாகிய தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டானென்று அறிவீர்களாக; அவன் சீக்கிரமாய் வந்தால் அவனுடனே கூட நான் வந்து, உங்களைக் காண்பேன்” என்று உள்ளது. அந்த நேரத்தில் தீமோத்தேயு பவுலுடன் இருந்திருந்தால், பவுல் எபிரேயர் புத்தகத்தை எழுதினதற்கான ஆதாரமாகும். இதற்குப் பின்பு, தீமோத்தேயுவைக் குறித்து ஒன்றும் தெரியவில்லை. அவருடைய பெயர் ஆதிக் கிறிஸ்தவ இலக்கியங்களில் குறிப்பிடப்படவில்லை.[6]

பவுல் தீமோத்தேயுவை **நம்முடைய** [*ho,* நேரடிப் பொருளில் “மட்டுமே” “the”] சகோதரன் என்று குறிப்பிடுகிறார். இங்கும் 2 கொரிந்தியர் 1:1;

*பிலேமோன் 1; எபிரேயர் 13:23லும் அப்படிக் குறிப்பிடப்படுகிறார். பிற இடங்களில் அதேபோல அவர் நிச்சயமற்ற அடுத்துவரும் பெயர்ச்சொல்லில் குறிப்பிடுகிறார் (1 தெசலோனிக்கேயர் 1:1; 2 தெசலோனிக்கேயர் 1:1). 1 தீமோத்தேயு 1:2 லும் 2 தீமோத்தேயு 1:2லும், பவுல் அவனை "பிள்ளை" என்றும் (மூலபாஷைப்படி) "குமாரனென்றும்" பவுல் அழைக்கிறார். இரண்டு வார்த்தைகளுமே கிரேக்க மொழியில் டெக்னோன் ("பிள்ளை") என்று சொல்லப்பட்டுள்ளது. "என்னுடைய உத்தமப்பிள்ளை" என்றும் "பிரியமான குமாரன்" என்றும் அழைப்பதில் பவுலின் பாசம் பிரதிபலிக்கிறது. இந்த திட்டமான அடுத்துவரும் பெயர்ச்சொல்குவர்த்துக்கும் (ரோமர் 16:23) சொஸ்தனேயுக்கும் (1 கொரிந்தியர் 1:1), அப்பொல்லோவுக்கும் (1 கொரிந்தியர் 16:12) பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*பவுல் தீமோத்தேயுவை "உடன் அப்போஸ்தலன்" என்று அழைக்கவில்லை ஏனெனில் பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தை அவன் பங்கு போடவில்லை. புதிய ஏற்பாட்டில் "சகோதரன்" "சகோதரர்கள்" போன்ற வார்த்தைகள்(adelphos) சரீரப்பிரகாரமான சகோதரர்களுக்குப் பயன்படுத்தப்பட்டது (மத்தேயு 4:18; 12:47; நடபடிகள் 1:14; 12:2; கலாத்தியர் 1:19), அதேபோல ஒரே இனத்தையோ தேசத்தையோ சேர்ந்தவர்களுக்கும் (நடபடிகள் 2:29; 3:17, 22; 7:2; 9:17), ஆவிக்குரிய சகோதர்களுக்கும் - கிறிஸ்துவுக்குள் சகோதரர்களுக்கும் பயன்படுத்தப்பட்டது (நடபடிகள் 9:30; 10:23; 21:20; ரோமர் 14:10).*

*"சகோதரன்" ("brother") என்ற வார்த்தை ஒரு பட்டமாகப் பயன்படுத்தப்பட்டதல்ல; அது ஒரு நட்புறவுமுறையை வெளிப்படுத்துவதாகும். சகல கிறிஸ்தவர்களும் சமமான நட்புறவு கொண்ட கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் (கலாத்தியர் 3:26-28); ஆனால் இது அவர்களெல்லாருக்கும் ஒரே விதமான கடமைகளோ, வரங்களோ அல்லது அதிகாரமோ அளிக்கப்பட்டவர்கள் என்று குறிப்பிடுவதில்லை (ரோமர் 12:6-8). கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் யாவரும் சகோதரர்கள் எனும் அடிப்படையில், வழிநடத்துவோரெல்லாம் மற்ற சீஷர்களிடமிருந்து தங்களை வித்தியாசப்படுத்திக் காட்டிக் கொள்ளத்தக்கதாக பட்டங்களை அணிந்து கொள்ளக் கூடாது (காண்க மத்தேயு 23:8-10).*

*பவுலின் பாவங்கள் கழுவப்படுவதற்கு முன் அனனியா அவரை "சகோதரனாகிய சவுலே" என்றழைத்தார் (நடபடிகள் 22:16). இதிலிருந்து சிலர் (பவுல் இயேசுவை "ஆண்டவரே" என்றழைத்ததன் அடிப்படையில்; நடபடிகள் 9:5; 22:8; 26:15) பவுல் தமஸ்குவை நெருங்கும் போது இயேசுவின் தரிசனத்தால் (பகுதி) புதிய பிறப்பை அடைந்து விட்டார் என்று முடிவு செய்கின்றனர். ஒரு ஸ்டடிபைபிள் என்றழைக்கப்பட்ட திருமறையின் அடிக்குறிப்பில் நடபடிகள் 9:5க்கு பின்வரும் விளக்கம் அளிக்கப்படுகிறது: "வசனங்கள் 3-9 பவுலின் மன மாற்றம் தமஸ்குவுக்கு வெளியே நிகழ்ந்ததாக கூறுகிறது. பவுல் அனனியாவால் 'சகோதரனாகிய சவுலே' என்றழைக்கப்பட்டார் (வசனம் 17). அனனியா பவுல் புதிய பிறப்பை அடைந்த அனுபவத்தை பெற்றிருந்ததாக யூகிக்கிறான் (யோவான் 3:3-5)."[7]*

*எண்ணற்ற சம்பவங்களில் பவுலும் பேதுருவும் கிறிஸ்தவர்களாகாத யூதர்களை "சகோதரர்களே" அல்லது "சகோதரனே" என்று அழைத்தனர் (நடபடிகள் 2:29; 3:17; 7:2; 13:15, 26, 38; 22:1; 23:1, 5, 6; 28:17). அனனியா*

பவுலை *யூதனாகிய* சகோதரனே என்று அழைத்தாரேயன்றி, *கிறிஸ்தவனாகிய* சகோதரன் என்று அழைக்கவில்லை. இவ்வேளையில் பவுல் தேவனுடைய பிள்ளையாகத் தக்கதாக இன்னும் ஞானஸ்நானம் பெற்றிருக்க வில்லை, அல்லது பரிசுத்த ஆவியையும் பெற்றிருக்கவில்லை (நடபடிகள் 9:17). இயேசுவை "ஆண்டவரே" என்றழைத்து அவருக்குப் பதிலளிப்பது மட்டும் போதுமானதல்ல (மத்தேயு 7:21; லூக்கா 6:46). அனனியா அவருக்குப் பாவங்கள் கழுவப்பட கர்த்தருடைய நாமத்தை எப்படித் தொழுது கொள்ளுவது என்பது பற்றி உபதேசித்தார்.

பவுல் தீமோத்தேயுவை "சகோதரனாக" குறிப்பிட்டது அவன் பவுலின் கிறிஸ்தவச் சகோதரனாக இருந்ததினாலே மாத்திரமல்ல, கொலோசெயிலும் உலக மனைத்திலும் இருந்த கிறிஸ்தவர்களுக்கெல்லாம் சகோதரனாக இருந்ததினிமித்தம் அப்படி அழைக்கப்பட்டான். மற்ற கிறிஸ்தவர்களையும், குவர்த்துவையும், சொஸ்தெனேயையும், அப்பொல்லோவையும்கூட அவர் "சகோதரன்" என்றழைத்தார் (ரோமர் 16:23; 1 கொரிந்தியர் 1:1; 16:12). இந்த சம்பவங்களிலே "சகோதரன்" எனும் வார்த்தை சரீரப்பிரகாரமான சகோதரனுக்கோ, ஒரு பட்டமாகவோ, அல்லது சபையிலே ஒரு ஸ்தானமாகவோ பயன்படுத்தவில்லை.

## விசுவாசமுள்ள கொலோசே சகோதரர்கள் (1:2)

***[2]கொலோசே பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.***

சபைகளுக்கு எழுதும் போது ஒருவகையில் வித்தியாசப்பட்ட பதங்களைப் பயன்படுத்தி எழுதுவதற்கு குறிப்பிடத்தக்க காரணம் எதுவுமில்லை. தெசலோனிக்கேயர், கொரிந்தியர் மற்றும் கலாத்தியர் ஆகியோருக்கு எழுதும்போது "சபைகளுக்கு" என்று எழுதுகிறார். "ரோமர், பிலிப்பியர், கொலோசெயர் மற்றும் எபேசியருக்கு எழுதும் போது, அவர்களை அவர் 'பரிசுத்தவான்கள்' என்று குறிப்பிடுகிறார்." "சபை" எனும் பதம் கிறிஸ்தவர்களின் அமைப்பைக் கொண்ட ஒரு கூட்டகுழுவை பொருள்படுத்துகிறது, "பரிசுத்தவான்கள்" என்று குறிப்பிடுவதோ தனிப்பட்டவர்களின் கூட்டமைப்பே அந்த குழுவாகிறது. தனது நிருபம் கூடுதலாக தனிப்பட்ட உணர்வை ஏற்படுத்தும்படி "பரிசுத்தவான்கள்" எனும் பதத்தை அவர் பயன்படுத்தியிருக்கலாம்.

***"கொலோசே பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு" (1:2)***

***பரிசுத்தவான்கள்*** (*hagioi*) என்பது "பரிசுத்தமானவர்கள்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதின் தொடர்பு (*hagiazō,* "பரிசுத்தமாக்குதல்") என்பது விசேஷித்த நோக்கத்திற்காக பிரித்தெடுத்தல் என்று அர்த்தப்படுகிறது. கிறிஸ்தவர்களுக்கு ஒப்பிடும்போது, உலகின் தீமையான செயல்பாடுகளிலிருந்து

பிரித்தெடுக்கப்பட்டு தேவனுடைய நோக்கத்திற்காக சேவித்தல் என்று பொருள். பரிசுத்தவான்கள் என்பது கிறிஸ்தவ சமுதாயத்திற்குள் புகழ்பெற்ற ஒரு விசேஷித்த கூட்டமல்ல, மாறாக எல்லாருமே இயேசுவைப் பின்பற்றுபவர்களே (நடபடிகள் 26:10; ரோமர் 8:27; 12:13; 2 கொரிந்தியர் 13:13; 16:2; 2 கொரிந்தியர் 1:1; எபேசியர் 1:1) - இவர்கள் உலகப் பிரகாரமான வாழ்விலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டவர்கள் (2 கொரிந்தியர் 6:17). அவர்கள் இருளின் அதிகாரத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டவர்கள் (நடபடிகள் 26:18; கொலோசெயர் 1:13; 1 பேதுரு 2:9). "பரிசுத்தவான்கள்" என்ற வார்த்தை அவர்களுடைய அழைப்பைக் குறிப்பிடுகிறது, அவர்களுடைய பாவமற்ற நடத்தையைக் குறிப்பிடுவதில்லை. கொரிந்து பட்டணத்து சபையின் அங்கத்தினர்களை பவுல் "பரிசுத்தவான்கள்" என்று குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 1:2), ஆகிலும் அங்கிருந்த சபையின் அங்கத்தினர்களில் சிலர் ஆவிக்குரிய உபத்திரவங்களையும், உபதேசங்களில் அமைதி குலைச்சலும், ஒழுக்கக் காரியங்களில் சீர் கேடுகளையும் சந்தித்துக் கொண்டிருந்தனர்.

பவுல் "பரிசுத்தவான்கள்" என்று ஒரு கூட்டத்தையும் "விசுவாசமுள்ள சகோதரர்கள்" என்று மற்றொரு கூட்டத்தையும் குறிப்பிட்டு எழுதவில்லை. ஒரே ஒரு பெயர்ச்சொல்லில் (*tois*) இரண்டு வார்த்தைகளின் வெளிப்பாடாக - அதாவது இதன் பொருள் இரண்டு வித்தியாசப்பட்ட கூட்டமல்ல, ஒரே கூட்ட மக்களை இரண்டு வேறுபட்ட முறையில் காட்டுகிறார்.

இபார்ட் G. பிரேட்சர் மற்றும் யூஜின் A. நிடா ஆகியோர் பின்வருமாறு எழுதினர்,

> கிரேக்க வசனப்பகுதியின் அமைப்பு "பரிசுத்தவான்களை" பண்பாட்டின் நிமித்தம், ஒரு சிறு மாறுதல் *சகோதரர்களிடம்* ஏற்படுத்தி, *விசுவாசமுள்ளவர்களைப்*போலவே நடத்த வேண்டும் [திருத்தப்பட்ட ஸ்டாண்டர்ட் மொழிபெயர்ப்பு (RSV)], ஏனெனில் முழு சொற்றொடருக்கும் ஒரே ஒரு துணை வாசகம் மட்டுமே உண்டு: "பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு."[8]

யோவான் 3:5 ஐயும் இதே விதிதான் கட்டுப்படுத்துகிறது, இங்கே ஒரு முன்னிடைச் சொல்லாகிய"னாலும் (of)" (*ex*) எனும் பதம் "ஜலத்தினாலும் ஆவியினாலும்" எனும் சொற்றொடரில் பயன்படுத்தப்பட்டு ஒரே பிறப்பைத்தான் ஆலோசனையாகச் சொல்லுகிறது, இரண்டு பிறப்புக்களையல்ல. ஒரே பிறப்பிற்கு இரண்டு பொருட்கள் உட்படுத்தப்பட்டுள்ளது, "ஜலம் மற்றும் ஆவி."

> யோவான் இரண்டாம் முறை வருகிற "னாலும் (of)" (*ex*) ஆவிக்குப்பின் பயன்படுத்தவில்லை, இரண்டு வித்தியாசப்பட்ட நிகழ்வுகளாக பிரித்து விளக்கியிருந்தால் அந்த இரண்டாவது "னாலும் (of)" (மூலப்பாஷையில்) பயன்படுத்தியிருக்கக் கூடும் இந்த ஒருமை கடந்த கால முற்று நிபந்தனையைக் குறிக்கும் வினை மற்றும் பிறந்த நாளின் நிலையைக் குறிக்க முழுமையாக ஸ்தாபிதம் பெற்றது இதன் நேரடிப்பொருள்

> ஜலத்தினாலும் ஆவியினாலும் "ஒரே முறை பிறத்தல் ..."
>
> இந்த உண்மையை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால் யோவான் 3:3-5ஐக் குறிப்பிட்டு இரண்டுஞானஸ்நானங்கள் அல்லது இரண்டு பிறப்புகள் (இயற்கைப் பிறப்புக்குப் பின்) எனக்குறிப்பிட முயற்சிப்பது முரணானதாகும், அவை "ஜலத்தினால் ஞானஸ்நானம்" அல்லது முன்பதாக நீதிக்கான "மறுஜென்மம்" மற்றும் பின்னதாக "ஆவியின் ஞானஸ்நானம்" பரிசுத்தமாக்கப்படுவதற்கு ... என்கின்றனர்.
>
> ஆவிக்குரிய ரீதியில் மனுஷன் ஒரே ஒருமுறை மட்டுமே "ஜலத்தினாலும் ஆவியினாலும்" பிறக்கிறான்.[9]

விசுவாசிகளாயிருக்கிற என்பதற்கு கிரேக்க வார்த்தை, *பிஸ்டாய்,* என்பது பெயர்ச்சொல்லாகிய "விசுவாசம்" என்பதன் அடிப்படையிலிருந்தும் "விசுவாசித்தல்" எனும் வினைச்சொல்லின் அடிப்படையிலிருந்தும் (*pisteuō*) வருகிறது. இயேசுவைப் பின்பற்றி செல்வோரை விளக்கப் பயன்படுத்தப்படும் இதன் பெயரிடைப் பண்புச்சொல் எப்போதுமே கிறிஸ்தவர்களுக்கு சம்பந்தப்படுத்தி பேசும் வார்த்தையாகப் பொருள்படாது. ஒரு வேலைக்காரன் தனது எஜமானனுக்கு விசுவாசமுள்ளவனாக இருக்கக் கூடும் (மத்தேயு 24:45; 25:21, 23), ஒரு வேலைக்கு அமர்த்தப்பட்டவர் வேலை கொடுத்தவருக்கும் (லூக்கா 12:42; 1 கொரிந்தியர் 4:2), ஒரு நபர் தனக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களுக்கும் (லூக்கா 16:10), ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்கும் (நடபடிகள் 16:15) விசுவாசமுள்ளவர்களாய் (உண்மையுள்ளவர்களாய்) இருப்பதைக் குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட சிலர் தேவனுக்கு ஊழியஞ் செய்வதில் உண்மையுள்ளவர்களாயிருப்பதைப் போல (கொலோசெயர் 1:7; 4:7, 9; 1 தீமோத்தேயு 1:12; எபிரெயர் 3:5; 1 பேதுரு 5:12; வெளிப்படுத்தின விசேஷம் 2:13) தேவனும் இயேசுவும் உண்மையுள்ளவர்களாயிருக்கின்றனர் (1 கொரிந்தியர் 1:9; 2 தெசலோனிக்கேயர் 3:3). கிரேக்க மொழியில் பெற்றோருக்கு கீழ்ப்படிகிற விசுவாசமுள்ள பிள்ளைகளைக் குறித்து தீத்து 1:6ல் குறிப்பிடப்படுகிறது - இது மூப்பருக்குரிய தகுதி பெற வேண்டியவருடைய வீட்டாரின் நல்நடத்தையைக் குறித்து பேசுகிறது.

கொலோசெ **சகோதரர்கள்** "விசுவாசமுள்ளவர்களாயிருந்தனர்," பவுல் அவர்களை "விசுவாசமுள்ளவர்களுமாய்" என்று குறிப்பிடுவதன் மூலம் அவர்கள் மீது தனக்குள்ள உறுதியான நம்பிக்கையைக் காட்டவும் அவர்களுடைய கிறிஸ்தவ நடக்கையில் அவர்களை ஊக்கப்படுத்தவும் எழுதியிருக்கக் கூடும். இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தும் விதம் அவர்கள் தங்களுடைய விசுவாசத்தில் அவர்கள் இயேசுவுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள் ஏனெனில் அவர்கள் தங்கள் விசுவாசத்தை அவரிடத்தில் வைத்துள்ளனர், நேர்மையாய் அவரைப் பின்பற்றவும் செய்கின்றனர். அவர்கள் பொறுமையோடும் தகுந்த முகாந்திரங்களோடும், தொடர்ந்து இயேசுவை சேவிக்கின்றனர்.

அவர்களின் "சகோதரத்துவம்" அவர்களின் ஆவிக்குரிய உறவுமுறையில் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றனர் எனக்காட்டுகிறது (கலாத்தியர் 3:26). அவர்கள் ஒரே குடும்பத்துக்குள் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து அவரை ஞானஸ்நானத்திலே தரித்துக் கொண்டிருக்கிறார்கள் (கலாத்தியர்

*3:27). "பரிசுத்தவான்கள்" மற்றும் "சகோதரர்கள்" என்பவைகள் ஆண்பாலில் சொல்லப்பட்ட போதிலும், சகோதரர்கள் சகோததரிகள் ஆகிய இருசாரருமே இதற்கு உட்படுத்தப்பட்டவர்களாயிருக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்தவுக்குள் ஒன்றாக இருக்கிறார்கள் (கலாத்தியர் 3:28), அவருடைய ஒரே சரீரத்தின் அங்கங்களாயிருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 12:13). கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் உறவினர்களாயிருக்கிறோம் என்பதை உணர வேண்டும். நாம் ஒரே குடும்பத்து உறுப்பினர்களாயிருக்கிறோம், இப்படியாக ஒரு பந்தத்தால் கட்டப்பட்டு ஒன்றாக்கப்பட்டிருக்கிறோம்.*

***கிறிஸ்துவுக்குள் இருப்பது** என்பது ஒரே ஆவிக்குரிய ரீதியில் இருத்தல் என்று பொருள். இயேசு அவருக்குள் இருக்கிறதன் கருத்தை அறிமுகப்படுத்தினார் (யோவான் 6:56; 14:20; 15:1-7). பவுல் இந்த "கிறிஸ்துவுக்குள்" இருக்கிற கருத்தை ஒன்றுபடுத்தி காட்டி தமது எழுத்துக்களில் எழுதினார் (ரோமர் 8:1; 1 கொரிந்தியர் 15:18; 2 கொரிந்தியர் 5:17; கொலோசெயர் 1:4, 28; 2:5).*

*கொலோசெயர்கள் "கிறிஸ்துவுக்குள்" இருந்தார்கள் ஏனெனில் அவர்களுடைய விசுவாசம் "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானம் பண்ணப்படும்படி செயல் தூண்டுதலை உண்டாக்கிற்று (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27). ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துக்குட்படுபவர்களுக்கு சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் உண்டாயிருக்கிறது (எபேசியர் 1:3), அதிலே மீறுதல்களுக்கு "மன்னிப்பும்" (எபேசியர் 1:7), "கிருபையும்" (2 தீமோத்தேயு 2:1), "நித்திய ஜீவனும்" (1 யோவான் 5:11). உட்படுத்தப்பட்டுள்ளது (1 யோவான் 5:11). எபேசியர் 2:13 சொல்லுகிறது, "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்." இயேசுவுக்குப் புறம்பே இருக்கும் ஜனங்கள் கிறிஸ்துவினிடத்திலிருந்து பிரிந்து இருக்கிறார்கள்; அவர்கள் நம்பிக்கையற்றவர்களாகவும் தேவனற்றவர்களாயுமிருக்கிறார்கள் (எபேசியர் 2:12).*

*இந்த நிருபம் கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட போதிலும், மற்றவர்களுக்குமானதாக இருந்தது (4:16), பவுலின் இந்த நிருபங்கள் அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஏற்பைப் பெற்றிருந்தது ஆக மற்ற ஏவப்பட்ட வசனங்களோடு இதுவும் மதிப்பைக் பெறக் கூடியதாக இருக்கிறது (2 பேதுரு 3:15, 16). அவைகள் எக்காலத்திலும் உள்ள எல்லா கிறிஸ்தவர்களுக்கும் தேவையான உபதேசங்களைக் கொண்டுள்ளது. பவுல் எழுதினவைகளெல்லாம் இயேசுவின் கட்டளைகள் (1 கொரிந்தியர் 14:37).*

### "பிதாவாகிய தேவனாலும் ... உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" *(1:2)*

*மற்ற நிருபங்களில் வாழ்த்துக்களைச் சொல்லுவது போலவே **கிருபையும் சமாதானமும்** உண்டாவதாக என்ற பவுல் எழுதினார். "கிருபை" என்பது கிரேக்க வாழ்த்துரை (வழக்கமாக இது ஒரு வினைப்பொதுநிலை மதசார்பில்லாத நிலையில் பேசும் சொல்: சேரேயின்) மற்றும் "சமாதானம்" ஒரு யூத வாழ்த்துரை. "கிருபை" (charis) என்பது வசீகரம் மிக்க நேசமிகுந்த, பெற்றிருக்கும் ஒரு ஆஸ்தியாக ஒரு நபரால் வெளியிடப்படுவது அல்லது யார் மீது (கிருபை) காட்டப்படுகிறதோ அவர்களால் உணரத்தக்கது. "கிருபை"*

*எனும் வார்த்தையின் ஐந்து பயன்பாடுகளை வசனங்கள் காட்டுகின்றன.*

1. *கிருபை பொருந்திய தன்மை அல்லது வசீகரத்தன்மை (லூக்கா 4:22; கொலோசெயர் 4:6).*
2. *ஏற்புடைமை அல்லது தயவு (லூக்கா 1:30; நடபடிகள் 2:47).*
3. *வரங்கள் (2 கொரிந்தியர் 4:15; 8:4).*
4. *நன்றியும் நன்றியறிதலும் (லூக்கா 17:9; 1 கொரிந்தியர் 15:57; கொலோசெயர் 3:16; 2 தீமோத்தேயு 1:3).*
5. *அளவற்ற தயவு மற்றும் தகுதியில்லாதவருக்கு கொடுக்கப்படும் ஈவு இலவசமாய்க் கொடுக்கப்படுவது (ரோமர் 3:24; எபேசியர் 2:8).*

*Charis எனும் பதம் மத்தேயுவிலோ அல்லது மாற்கு புத்தகத்திலோ காணப்படுவதில்லை, அது லூக்காவில் எட்டுமுறையும், யோவானில் நான்கு முறையும், பவுலின் நிருபங்களில் நூறு முறையும் காணப்படுகிறது.*

*செப்துவஜிந்த்தில் (LXX) charis எனும் பதம் சென் எனும் எபிரெய வார்த்தையில் பயன்படுத்தப்படுகிறது, பிரதானமானவரால் அருளப்படும் ஆசீர்வாதங்களை அனுபவித்தலைக் குறிக்கிறது. இது தேவனுடைய கிருபையின் தயவு மற்றும் ஜனங்களுக்குக் காட்டப்படும் இரக்கம் என்பதற்குப் பயன்படுத்தப்படக் கூடும் (ரோமர் 15:15). அல்லது பாவிகளுக்கு அவர்கள் தகுதியற்றவர்களாக இருக்கையில் அவர் காட்டும் தயவு (எபேசியர் 2:8). தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் இருக்கும் இடைவெளிக்கு பாலமாக அமைவது கிருபையே.*

*இயேசு சிலுவையில் சிந்திய தமது இரத்தத்தினாலே (எபேசியர் 1:7), எல்லாருக்கும் கிருபையை அளித்தார் (ரோமர் 5:15). கிருபையை அடையும் சிலாக்கியம் விசுவாசத்தினாலே வருகிறது (ரோமர் 5:2), அது தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும் ஒரு விசுவாசத்தின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது (யாக்கோபு 2:24). தேவனுடைய கிருபையினாலே இரட்சிப்பு கொடுக்கப்பட்டுள்ளது (எபேசியர் 2:8, 9) எனவே மனிதனுடைய மதிப்பினாலே அதைச் சாதித்து விட முடியாது. இயேசு தமது ஜனங்களுக்காக இரட்சிப்பைக் கொண்டிருந்தாலும் (மத்தேயு 1:21), அந்த இரட்சிப்பு அவருக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளக்கூடும் (எபிரெயர் 5:9). அவர் தமது மரணத்தில் மற்றவர்களுடைய கரங்களில் தம்மை ஒப்புக்கொடுத்தார்; இதில் (இரட்சிக்கப்படுபவர்) எவ்வித வேலையும் செய்து இரட்சிப்பைக் கொண்டுவரவில்லை. அதே போல அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தைப் பெற மற்றவருடைய கரத்தில் தன்னை ஒப்புக்கொடுப்பது அவசியமானது (ரோமர் 6:3) மேலும் பாவமன்னிப்பைப் பெறுவதற்கும் இது அவசியம் (நடபடிகள் 2:38). கிருபை கிறிஸ்துவுக்குள் இருக்கிறது (2 தீமோத்தேயு 2:1), ஒரு பாவி கிறிஸ்துவுக்குள் பெறும் ஞானஸ்நானத்தின்போது அங்கே கிருபை கிரியை செய்கிறது. மனிதன் செய்த நீதியின் கிரியையினிமித்தம்அல்ல, தாழ்மையான கீழ்ப்படிதலின் மூலமாக, மறுஜென்ம முழுக்கை அடைகிறான் (தீத்து 3:5-7). இப்படியாக இயேசுவின் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் இரட்சிப்பு அருளப்பட்டது (ரோமர் 5:9, 10).*

*கொலோசெயருக்கு எழுதின வாழ்த்துரையில், பவுல் இரட்சிப்பைக் கொண்டு வருகிற அளவற்ற தயவைக் குறிப்பிடவில்லை. அவர்கள் ஏற்கனவே இரட்சிப்பைப் பெற்றிருந்தவர்கள். மாறாக, அவர்களுடைய மாமிச மற்றும் ஆவிக்குரிய தேவைகளை சந்திக்கிறவரும் கிருபை நிறைந்த சிருஷ்டிகருமாகிய அவரிடமிருந்து தங்களுடைய அன்றாட தயவுகளை அவர்கள் பெற வேண்டுமென்று அவர் விரும்பினார். கிறிஸ்தவம் இரட்சிப்புக்குத் தேவையான கிருபையை பெற்றுக் கொள்ளச் செய்வது மாத்திரமல்ல, அதிலே ஒரு தொடர் பரிபூரண வாழ்க்கையையும் கூட உட்படுத்தியிருக்கிறது (யோவான் 10:10) அதுவே ஆத்துமாவுக்கு ஆரோக்கியமான திருப்தியைக் கொண்டு வருகிறது. இந்தக் கிருபையைத்தான் தேவனிடத்திலிருந்து அவர்களுக்குக்கிடைக்க வேண்டுமென்று பவுல் விரும்பினார்.*

*பவுல் மேலும் தேவனிடத்திலிருந்து* ***சமாதானத்தையும்*** *கூறினார். "சமாதானம்" என்பதன் எபிரேய வார்த்தை "சாலோம்," இதன் பொருள் தேவனிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதங்களினால் உண்டாகும் ஆரோக்கியமான நிலையை அனுபவித்தலைக் குறிக்கிறது. "சமாதானம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை eirēnē சமாதானம் ஒற்றுமையையும், அமைதி குறையாத நிலையையும், கலங்கின இருதயத்திற்கு விடுதலையையும் எவ்வித சண்டை சச்சரவில்லாத ஆவிக்குரிய இளைப்பாறுதலையும் அல்லது உட்பூசலற்ற இளைப்பாறுதலை கொண்டு வருகிறது. இயேசு தன்மைப் பின்பற்றுவோருக்கு சமாதானத்தைக் கொடுக்கிறார். இது உலகம் கொடுக்கிற பிரகாரமான சமாதானம் அல்ல (யோவான் 14:27), அல்லது உபத்திரவமில்லாத சமாதானமும் அல்ல (யோவான் 16:33).*

*இந்த நிருபம் ஏற்கனவே தேவனிடத்தில் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக இயேசுவோடு ஒப்புரவான கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. இந்த சமாதானத்தைப் பற்றி கொலோசெயர் 1:20-22ல் விவாதிக்கப்படுகிறது. ஆனாலும் இந்த வேளையில் பவுலின் கருத்து இதைக் குறித்ததல்ல. மாறாக, அவர் தமது சகோதரர்கள் தேவனோடு ஒப்புரவான பிறகு தொடரும் சமாதானத்தைக் குறித்துப் பேசுகிறார் - அதாவது, கலங்குகிற உலகத்தில் கலங்காத சமாதானமுள்ள இருதயத்தைத் தருகிறார்.*

*கிறிஸ்தவர்களாகிய நாம், "கலங்காத அமைதி நிறைந்த வாழ்க்கைக்காக ஜெபிக்க வேண்டியவர்கள்" (1 தீமோத்தேயு 2:2) நமது கவலைகளையெல்லாம் ஜெபத்தின் மூலம் தேவனிடத்தில் வைத்து விட வேண்டியவர்கள் (1 பேதுரு 5:7). இதன் விளைவாக, "அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:6, 7). தேவனுடைய சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள, நமது சிந்தனைகளும் செயல்களும் தேவனுடைய எதிர்பார்ப்புக்குத் தக்கவைகளாக மாறவேண்டும் (பிலிப்பியர் 4:8, 9). பவுல் கொலோசெயருக்கு உண்மையான மூல ஊற்றாகிய, தேவனிடத்திலிருந்து கிருபையும் சமாதானமும் வரவேண்டும் என்று எதிர்பார்த்தார்.*

*பவுல் தனது வாழ்த்துரையின் இறுதியில் இவைகள்* ***பிதாவாகிய தேவனால்*** *உண்டாயிருப்பதாக என்று சொன்னார். வசனம் 2 மட்டும்தான் தனது நிருபங்களில் வழக்கமாக குறிப்பிடுகிற "இயேசு கிறிஸ்துவினாலும்" என்று*

*குறிப்பிடாமல் பிதாவை மட்டும் சுட்டிக் காட்டுகிற வசனம். "தேவன்" என்னும் பதம் தெய்வத்துக்கு பயன்படுத்தப்படுகிறது. பிதாவுக்கு குறிப்பிடப்படுவதற்கு அப்பால், "தேவன்" எனும் வார்த்தை இயேசுவுக்கும் சொல்லப்படுகிறது (யோவான் 1:1) பரிசுத்த ஆவிக்கும் சொல்லப்படுகிறது (நடபடிகள் 5:3, 4). புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான இடங்களில் குறிப்பிடப்படுவது போல, இங்கே, இயேசுவையோ பரிசுத்த ஆவியையோ குறிக்கப் பயன்படுத்தாமல், பிதாவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது, கிறிஸ்தவர்கள் தேவனை "எங்கள் பிதாவே என்று நோக்கிக் கூப்பிடலாம்" அது அவரே எல்லாவற்றின் ஆரம்பமும் நமக்கு ஆதரவாயுமிருப்பவர் என்பதினாலும் அப்படிக் கூப்பிடுவது சிறந்தது. ஒரு குழந்தை (அல்லது பிள்ளையானவன்) தான் நிலைத்திருப்பதற்கும் உலகப்பிரகாரமான தகப்பன் தன்னை ஆதரிப்பதற்கும் காரணமாயிருப்பதால் தான் கடமைப்பட்டிருப்பது போல, எல்லாரும் தாங்கள் நிலைத்திருப்பதற்கும், தங்களுடைய தேவைகளை சந்திப்பதற்கு, மாமிச ஆவிக்குரிய காரியங்களில் தேவனுக்கு கடமைப் பட்டுள்ளனர். விசேஷித்த பொருளில் சொன்னால், கிறிஸ்தவர்கள் அவரை "நம்முடைய பிதா" என்று அழைக்கலாம். பவுல் "நம்முடைய பிதா" எனும் சொற்றொடரை மிக அபூர்வமாக, பெரும் பாலும் தனது வாழ்த்துரைகளிலே பயன்படுத்தினார் இயேசு தமது சீஷர்கள் "எங்கள் பிதாவே" என்று அழைக்கும்படி போதித்தார். கிறிஸ்து அடிக்கடி, தேவனைக் குறிப்பிட்டு "உங்கள் பிதா" என்று சொன்னார் (மத்தேயு 5:16, 45ல் போல).*

## மேலும் கற்றுக்கொள்ள

**"கிறிஸ்துவுக்குள்"**

*"கிறிஸ்துவுக்குள்" என்பதன் முக்கியமான கருத்து பவுலால் மட்டுமே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (அவருடைய நிருபத்திற்குப் புறம்பே இது யோவான் 15:2-6; 1 பேதுரு 3:16; 5:14; 1 யோவான் 1:5; 2:5, 27, 28; 3:6; 5:11; வெளிப்படுத்தின விசேஷம் 14:13 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது.) கொலோசெயர் 1, 2ல் பவுல் "கிறிஸ்துவுக்குள்" அல்லது "அவருக்குள்" எனும் பதத்தை இயேசுவின் தகுதியாம்ஸங்களையும் கிறிஸ்தவர்கள் அவரோடு கொண்டுள்ள உறவுமுறையையும் விளக்கப்படுத்தும்படி பயன்படுத்தினார்.*

- *கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய முறையில் நட்புறவு கொண்டிருப்பவர்கள் (1:2, 4, 28).*
- *அவருடைய நிலை நிற்க வைக்கும் வல்லமை (1:17).*
- *அனைத்து சிருஷ்டிகளுக்கும் தேவையானவற்றை அளிக்கிற நிறைவு (1:19).*
- *கிறிஸ்தவர்களின் நடக்கைக்கும் அவர்கள் கட்டப்படவும் இருக்கிற ஒரு ஸ்தானம் (2:6, 7).*
- *அவருடைய முழுமையான தெய்வீகம் (2:9).*
- *கிறிஸ்தவர்களை அவர் முழுமையாக்கும் தன்மை (2:10).*
- *ஞானஸ்நானத்திலே அவர் அளிக்கும் ஆவிக்குரிய விருத்தசேதனம் (2:11).*

*அவர் தமது பிற எழுத்துக்களில், "கிறிஸ்துவுக்குள்" மற்றும் "அவருக்குள்" எனும் பதங்களைப் பயன்படுத்தி இயேசுவை ஆவிக்குரிய முறையில் பின்பற்றிச்செல்லுகிறவர்களை விவரித்துக் காட்டினார் ஏனெனில் இவர்கள் தான் வித்தியாசப்பட்ட பல உள்ளூர் சபைகளின் அங்கத்தினர்கள், அவர்கள் "கிறிஸ்துவுக்குள்" அல்லது "கர்த்தருக்குள்" இருந்தவர்கள்.*[10]

*"கிறிஸ்துவுக்குள்" சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இருக்கிறது (எபேசியர் 1:3). இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கீழ்வரும் காரியங்களை உள்ளடக்கியுள்ளது:*

1. *மீட்பு (ரோமர் 3:24; எபேசியர் 1:7)*
2. *பாவமன்னிப்பு (எபேசியர் 1:7; கொலோசெயர் 1:14)*
3. *நித்திய ஜீவன் (ரோமர் 6:23; 2 தீமோத்தேயு 1:1; 1 யோவான் 5:11)*
4. *பரிசுத்தமாக்கப்படுதல் (1 கொரிந்தியர் 1:2)*
5. *கிருபை (1 கொரிந்தியர் 1:4; 2 தீமோத்தேயு 1:9; 2:1)*
6. *புதிய சிருஷ்டியாயிருத்தல் (2 கொரிந்தியர் 5:17)*
7. *ஒப்புரவாக்கப்படுதல் (2 கொரிந்தியர் 5:19)*
8. *நீதிமானாக்கப்படுதல் (2 கொரிந்தியர் 5:21)*
9. *தேவனுக்கு சமீபமாகக் கொண்டுவரப்படுதல் (எபேசியர் 2:13)*
10. *இரட்சிப்பு (2 தீமோத்தேயு 2:10)*

*நாம் எப்படி "கிறிஸ்துவுக்குள்ளாக" முடியும்? "கிறிஸ்துவுக்குள்" இருக்கும் ஒரு நபர் அவருடைய சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அனுபவிக்க இயலும். இது உண்மையானதால், இரண்டு முக்கியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட வேண்டும். முதலாவது "ஒரு நபர் எப்படி கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கிறார்?" பவுல் கொடுக்கும் பதில், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3); ஏனெனில் "உங்களில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலாத்தியர் 3:27). ஞானஸ்நானம் பெற்றவர்கள் முதலில் சுவிசேஷத்தைக் கேட்டிருக்க வேண்டும் (யோவான் 6:45), விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16:15, 16), மனந்திரும்பி (நடபடிகள் 2:38), இயேசுவே கர்த்தரென்று அறிக்கையிட (நடபடிகள் 8:37; ரோமர் 10:9, 10) வேண்டும். இரண்டாவது கேள்வி, "ஞானஸ்நானம் பெற்ற ஒருவர் இன்னமும் அவர் கிறிஸ்துவுக்குள்தான் இருக்கிறார் என எப்படி அறிந்துகொள்ளக்கூடும்? யோவானின் எழுத்துக்கள் அதற்கான பதிலைத் தருகிறது"; "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 2:5); "அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1 யோவான் 3:24).*

# பயன்பாடு

***அப்போஸ்தலர்கள், இயேசு தெரிந்துகொண்ட செய்தியாளர்கள் (1:1)***

*பவுல் தன்னை இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் என்று உறுதிப்படுத்தி கொலோசெயருக்குத் தனது நிருபத்தை ஆரம்பிக்கிறார். இயேசு சிலரை அப்போஸ்தலராக ஏற்படுத்தினார் (எபேசியர் 4:11), ஆனால் எல்லாரும் அப்போஸ்தலர்களல்ல (1 கொரிந்தியர் 12:28, 29). இந்த மனுஷர்கள் சபையிலே விசேஷித்த இடம் வகித்தனர்.*

*(1) அப்போஸ்தலர்கள் தான் சத்தியத்தை சேமித்து வைத்திருப்பவர்கள். இயேசு அவர்களுக்கு விசேஷித்த போதனைகளையும் அதிகாரத்தையும் கொடுத்ததால். அப்போஸ்தலர்கள் ஆதி சபையிலேமாத்திரமல்ல, நமக்கும் அவர்கள் முக்கியமானவர்கள் தான். அவர் அப்போஸ்தலர்களை பயிற்றுவித்து, பயிற்சி அளித்து, பிரசங்கிக்கவும் அனுப்பினார் (மாற்கு 3:14).*

*(2) அப்போஸ்தலர்கள் அஸ்திபாரமாக இருந்தபடியால், சபை அவர்கள் மீது கட்டப்பட வேண்டும் (எபேசியர் 2:20). அவர்கள் பரிசுத்த ஆவியிடமிருந்து தங்களுடைய போதனைகளைப் பெற்றிருந்தார்கள் (எபேசியர் 3:5). யாராகிலும் வேறே செய்தியைப் பிரசங்கித்தால், பரலோகத்தின் சாபம் அவர்கள் மேல் வரும் (கலாத்தியர் 1:8, 9).*

*(3) அப்போஸ்தலர்களின் உபதேசம் இன்று நமக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்களுக்கு இயேசு கட்டளையிட்டபோது அவர்களின் பணி என்ன என்பதை இயேசு விவரித்தார் (மத்தேயு 28:19, 20):*

- *அவர்கள் உலகத்தின் சகல ஜாதிகளையும் சீஷர்களாக்க வேண்டும்.*
- *அவர்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் அவர்கள் கைக் கொள்ளும்படி ஜனங்களுக்குப் போதிக்க வேண்டும்.*
- *அவருடைய போதனைகளும் கட்டளைகளும் சகல தேசத்தாருக்கும் கிறிஸ்தவயுகத்தின் முடிவு பரியந்தம் இருக்க வேண்டும்.*

*(வேதாகமப்புத்தகங்களை) எழுதின அப்போஸ்தலர்கள் தாங்கள் பெற்ற செய்தியை பாதுகாக்கும் பொருட்டு, தங்களுடைய மரணத்துக்குப் பிறகு அவர்களுக்கு வெளியாக்கப்பட்டதை ஜனங்கள் அறிந்துகொள்ளும்படி அப்படி எழுதி வைத்தார்கள் (2 பேதுரு 1:15; 3:1, 2). அவர்கள் எழுதினவைகளெல்லாம் "கர்த்தருடைய கட்டளையாக" ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 14:37). கிறிஸ்தவர்களாகிய நாம் அப்போஸ்தலர்களாலே அஸ்திபாரமிடப்பட்ட கிறிஸ்துவின் அடித்தளத்தின்மீது எப்படிக் கட்டுகிறோம் என்று ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 3:10).*

*அப்போஸ்தலர்களிடம் சகல சத்தியமும் கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்த சத்தியத்தை சகல தேசங்களிலும் பிரசங்கிக்க வேண்டும். இன்றைய சபை அதன் உபதேசங்களை அப்போஸ்தலர்கள் போதித்த அளவின் எல்லைக்குட்பட்டே போதிக்க வேண்டும். புதிய உடன்படிக்கையின் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அந்த அஸ்திபாரத்தில் ஒரு பகுதி (எபேசியர் 2:20) இதன் மேல் அனைத்துக் கிறிஸ்தவர்களும் கட்டவேண்டும்.*

**தீமோத்தேயுவைப் போன்ற ஒரு போதகர் (1:1)**

தீமோத்தேயு ஒரு கிறிஸ்தவ சகோதரனும் பவுலைப் போலவும் அப்பொல்லோவைப் போலவும் கிறிஸ்துவுக்கு, ஒரு உடன் ஊழியக்காரனாயிருந்தான் (1 கொரிந்தியர் 3:3, 4). இப்படித்தான் அனைத்துக் கிறிஸ்தவர்களும் இருக்க வேண்டும். அப்போஸ்தலர்களைப் போன்று அதிகாரத்தையோ அற்புத வரங்களையோ தீமோத்தேயு பெற்றிருக்கவில்லை. கொலோசெயருக்கு எழுதின நிருபத்தின் வாழ்த்துரையில் தீமோத்தேயுவின் பெயரையும் சேர்த்துக் கொண்டதன் மூலம் அவனைத்தனது உடன் ஊழியக்காரனாக ஏற்றுக் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகிறது. இன்றைய போதகர்களும் கூட தீமோத்தேயுவின் பிரிவில் தான் இருக்கின்றனர், ஏனெனில் அவர்கள் தங்களுக்கு வேண்டிய உபதேசத்தை ஏவப்பட்ட எழுத்தாளர்கள் எழுதின புதிய ஏற்பாட்டிலிருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும்.

*(1) தீமோத்தேயுவைப் போன்றே, அப்போஸ்தலர்களிடமிருந்து உபதேசங்களை பெற்றுக்கொள்கிறோம்.* பவுல் தன்னுடைய உபதேசத்தை இயேசுவால், பரிசுத்த ஆவியானவர் மூலம் கொடுக்கப்பட்டுபெற்றிருந்தார் (கலாத்தியர் 1:11, 12; எபேசியர் 3:5). தீமோத்தேயு போதிக்க ஏதுவாக செய்தியை பவுலிடமிருந்து பெற்றார் (2 தீமோத்தேயு 2:2). நாமும், கூட இயேசுவின் போதனைகளைக் கற்றுக் கொள்ள புதிய ஏற்பாட்டை எழுதிய அப்போஸ்தலர்களையும் பிற ஆசிரியர்களையும் நோக்கிப்பார்க்க வேண்டும், அவரே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரும் புதிய ஏற்பாட்டு உபதேசங்களின் ஸ்தாபகருமாவார் (எபிரெயர் 2:10; 12:2, 24). அவரே கிறிஸ்தவ யூகத்தில் நமக்கான தேவனுடைய வெளிப்பாடாயிருக்கிறார் (எபிரெயர் 1:1, 2).

*(2) தீமோத்தேயுவைப் போலவே மற்றவர்களுக்கு நாம் என்னத்தைப் போதிக்கிறோம் என்பதைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும்.* இயேசுவும் அப்போஸ்தலர்களும் தாங்கள் போதித்தவைகளில் கவனம் செலுத்தியதைப் போலவே பவுலின் உடன் வேலையாட்கள் அதே கவனமுடன் போதிக்க வேண்டியவர்களாயிருந்தனர். பவுல் தீமோத்தேயுவை எபேசுவில் விட்டு வந்ததன் நோக்கம் "வேற்றுமையான உபதேசங்களைப்" போதியாதபடிக்கு சிலருக்குக் கட்டளையிடும்படியாகத்தான் என்று சொன்னார் (1 தீமோத்தேயு 1:3). "என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று யாக்கோபு எழுதினார் (யாக்கோபு 3:1). நியாயத்தீர்ப்பு நாளிலே சிலரை அவர்கள் அவருடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் உரைத்திருந்த போதிலும் தம்மை விட்டு அகன்று போங்கள் என்று சொல்லுவார் (மத்தேயு 7:22, 23).

இயேசு பிதாவானவரிடமிருந்து தமக்கு கொடுக்கப்பட்ட செய்தியை மாத்திரம் போதிப்பதில் கவனமாயிருந்தார் (யோவான் 7:16; 8:26; 14:10, 24). அவர் சயமாய் ஒன்றையும் பேசவில்லை; பிதாவானவர் தமக்கு அருளிய வார்த்தைகளை மாத்திரம் அவர் பேசினார். பரிசுத்த ஆவியானவரும், கூட, இயேசுவிடமிருந்து பெற்ற செய்திகளை மாத்திரம் போதிப்பதில் கவனமாயிருந்தார். இயேசு அவரைக் குறித்து, "... அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லுவார்" (யோவான் 16:13) என்றார்.

*அப்போஸ்தலர்களும் தாங்கள் பெற்ற சத்தியத்தை மாத்திரம் நேர்மையாக மற்றவர்களுக்கு போதித்தார்கள். பவுல், "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும் சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச் சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்" (2 கொரிந்தியர் 4:2).*

*இயேசு அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியின் மூலம் கொடுத்த அதே செய்தியைத் தான் பிதாவானவர் நமக்கு வெளிப்படுத்த விரும்பினார். இப்பொழுது அப்போஸ்தலர்கள் மூலமாக நமக்கு மிகவும் எச்சரிக்கையுடன் வெளிப்படுத்தப்பட்ட செய்தியைக் கொண்டுள்ளோம், நாம் அதே கவனமுடன் அவர்கள் வசனத்தின் மூலம் நமக்குக் கொடுத்த செய்தியைக் காத்துக் கொள்ள வேண்டும். வசனங்களைப புரட்டுபவர்கள் தங்களுக்கு கேடு வரத்தக்கதாக அப்படிச் செய்கிறார்கள் (2 பேதுரு 3:15, 16).*

***விசுவாசமுள்ள சகோதரர்கள் (1:2)***

*கொலோசெயர் கர்த்தரிடத்தில் விசுவாசிகளாயிருந்ததை பவுல் கவனித்துப் பார்க்கிறார் (1:2). கள்ளப் போதகர்களைக் குறித்து எச்சரிக்கும்படி அவர்களுக்கு இந்த நிருபத்தைப் பவுல் எழுதினார் (2:8-23). போதிக்கிறவர்கள் மாத்திரம் தங்களுடைய போதனையில் எச்சரிக்கையாயிருக்கும்படி சொல்லப்படாமல், அனைத்துக் கிறிஸ்தவர்களும் தாங்கள் விசுவாசிக்கிற மற்றும் தங்கள் போதகர்களிடமிருந்து பெற்றுக் கொள்பவைகளில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியவர்கள்.*

*மோசம்போக்கும் போதனைகள் நம்மை அவிசுவாசமுள்ளவர்களாக்கக் கூடும். 2 தெசலோனிக்கேயர் 2:10-12ல், மோசம் போக்கும் போதனைகளால் பொய்களை விசுவாசிப்பவர்களுக்கும் வரும் ஆபத்தைக் குறிப்பிட்டு பேசுகிறார். கள்ளப் போதகங்களால் மோசம் போகாத கிறிஸ்தவர்களை அது பாதிப்பதில்லை. தாங்கள் மோசம் போகும்படி நடத்தப்படுவதைத் தவிர்க்க, கிறிஸ்தவர்கள் சத்தியத்தைக் கைக் கொண்டவர்களாயிருக்க வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 2:10), அது இயேசுவின் போதனைகளில் தொடர்ந்து கற்றுக் கொள்ளலாம் (யோவான் 8:31, 32). சத்தியம் இயேசுவில் காணப்படுகிறது (யோவான் 1:14, 17; எபேசியர் 4:21).*

*"கேட்டுக்கு ஏதுவான வேதப்புரட்டுக்களை" போதிக்கும் கள்ளப் போதகர்களைக் குறித்து பேதுரு எச்சரித்தார் (2 பேதுரு 2:1). எபேசு பட்டணத்து மூப்பர்களுக்கு உபதேசித்துச் சொல்லுகையில், அவர்களுக்குள்ளாகவும் மனுஷர்கள் எழும்பி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று பவுல் சொன்னார் (நடபடிகள் 20:29-31). கிறிஸ்தவர்கள் அனைத்து உபதேசங்களையும் சோதித்தறிய வேண்டியவர்கள் அதினால் அவர்கள் மோசம் போக்கப்பட மாட்டார்கள் (1 யோவான் 4:1).*

*பழைய ஏற்பாட்டில் வருத்தத்தைக் கொடுக்கத் தக்கதாக நிகழ்ந்த சம்பவம் ஒரு வாலிப தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து தேவனால் அனுப்பப்பட்டு, இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமிடத்தில் போய் ஒரு செய்தியை அறிவிக்கச் செய்தார் (1 இராஜாக்கள் 13:1-25). அவன் தமது செய்தியைக் கொடுத்தவுடன் அந்த இடத்தில் எங்கும் புசியாமலும், தண்ணீர்*

குடியாமலும், போன வழியை விட்டு மாற்று வழியில் திரும்பி வரவேண்டும் என்றும் தேவன் சொல்லியிருந்தார்.

அவன் தன் செய்தியை யெரொபெயாமிடத்தில் சொன்னபிறகு அவன் (ராஜா) அவனிடத்தில் தன்னுடைய வீட்டிலே வந்து இளைப்பாறவும் புசிக்கவும் வெகுமானம் பெற்றுச் செல்லுமாறும் கேட்டான். கர்த்தரால் இவைகள் தடைசெய்யப்பட்டிருந்தன என்பதே அவனுடைய மறுமொழியாய் இருந்தது.

ஒரு வயது முதிர்ந்த தீர்க்கதரிசி இந்த செய்தியைக் குறித்துக் கேள்விப்பட்டான். அவன் வாலிபத் தீர்க்கதரிசியைப் பின் தொடர்ந்து போய் அவனிடத்தில், "உம்மைப் போல நானும் ஒரு தீர்க்கதரிசிதான், 'அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க நீ அவனைத்திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவா' என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடேச் சொன்னான்" என்று அவனிடத்தில் பொய் சொன்னான் (1 இராஜாக்கள் 13:18).

அந்த வாலிப தீர்க்கதரிசி பொய்யை விசுவாசித்தபடியால் அது சோகமான நிகழ்ச்சியில் முடிந்தது. அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப் போகையில், ஒரு சிங்கம் அவனைக் கொன்று போட்டது. அவனுக்கு தேவன் கொடுத்த செய்தியை மாத்திரம் அவன் விசுவாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டான், மற்றவர்களின் வார்த்தைகளை அல்ல, அது தேவதூதன் மூலம் சொல்லப்பட்ட செய்தியாக குறிப்பிட்டாலும் கூட ஏற்புடையது அல்ல.

இயேசு கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியவைகளை மாத்திரம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பின்பற்றுவதில் கவனமாயிருக்க வேண்டும். அதன் உபதேசங்களுக்கு வேற்றுமையாக வாழ்வது இரட்சிப்புக்குப் பதிலாக ஆக்கினையையே கொண்டு வரும். கிறிஸ்தவர்கள் ஏவப்பட்டு புதிய ஏற்பாட்டை எழுதின மனுஷர்கள்மூலமாய் இயேசு போதித்தவைகளுக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிய வேண்டும். "அப்போஸ்தலர்களின் போதனைகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்துத் தொடர்ந்து நிலைத்திருந்த" ஆதிச்சபையை அனைத்துக் கிறிஸ்தவர்களும் பின்பற்ற வேண்டும் (நடபடிகள் 2:42).

---

குறிப்புகள்

[1]Herbert M. Carson, *The Epistles of Paul to the Colossians and Philemon: An Introduction and Commentary,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., *1960), 26.* [2]H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon,* The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 63. [3]E. E. Ellis, "Paul," in *New Bible Dictionary,* 2d ed., ed. J. D. Douglas, rev. N. Hillyer (Wheaton, Ill.: Tyndale House Publishing, 1982), 891. [4]Thomas W. Martin, "Nicopolis," in *The Anchor Bible Dictionary,* ed. David Noel Freeman (New York: Doubleday, 1992), 4:1108. [5]D. Edmond Hiebert, "Paul," in *The New International Dictionary of the Bible,* ed. Merrill C. Tenny, rev. J. D. Douglas (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987), 760. [6]Donald Guthrie, "Timothy," in *New Bible Dictionary,* 2d ed., ed. J. D. Douglas, rev. N. Hillyer (Wheaton, Ill.: Tyndale House Publishing, 1982), 1201. [7]Donald Stamps, ed., *The Full Life Study Bible*

(Grand Rapids, Mich.: Zondervan Publishing Co., 1992), 1677. [8]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon,* Helps for Translators (New York: United Bible Societies, 1977), 4. [9]Frederick Dale Bruner, *Theology of the Holy Spirit: The Pentecostal Experience and the New Testament Witness (*Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970; reprint, 1986), 257–58. [10]*ரோமர் 12:5; 16:3, 7, 9, 10; 1 கொரிந்தியர் 3:1; 4:10; 2 கொரிந்தியர் 1:21; கலாத்தியர் 1:22; 3:28; எபேசியர் 1:1, 3, 4; பிலிப்பியர் 4:1, 2, 21; 1 தெசலோனிக்கேயர் 2:14; 3:8.*